### ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த

# நவவிதஸம்பந்தம்

"பிதா ச ரக்ஷகச்ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: |
ஸ்வாம்யாதாரோமமாசபோக்தா சாத்யமநூதித: || "

என்கிரபடியே 1. அகாரத்தாலே பிதாபுத்ரஸம்பந்தம் சொல்லி, 2. அவரக்ஷணே என்கிற தாதுவினாலே ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தஞ்சொல்லி, 3. லுப்தசதுர்த்தியாலே ஶேஷஶேஷி ஸம்பந்தஞ்சொல்லி, 4. உகாரத்தாலே பர்த்ருபார்யா ஸம்பந்தஞ்சொல்லி, 5. மகாரத்தாலே ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தஞ்சொல்லி, 6. நமஸ்ஸாலே ஸ்வஸ்வாமி ஸம்பந்தஞ்சொல்லி, 7. நாரபதத்தாலே ஶரீரஶரீரி ஸம்பந்தஞ்சொல்லி, 8. அயநபதத்தாலே ஆதாராதேய ஸம்பந்தஞ்சொல்லி, 9. ஆயபதத்தாலே போக்த்ருபோக்ய ஸம்பந்தஞ்சொல்லி, ஆக,

நம்மாசார்யர்க்கள், ப்ரதமரஹஸ்ய தாத்பர்யமான நவவித ஸம்பந்தம் ஸ்வரூபஜ்ஞனுக்கு நித்யாநுஸந்தேயமென்று அநுஸந்தித்தும் உபதேஶித்தும் போருவர்கள்.

அவையெவையென்னில் – 1. விஶெஷண விஶேஷ்ய ஸம்பந்தம், 2. ரக்ஷ்ய ரக்ஷகஸம்பந்தம், 3. ஶேஷஶேஷி ஸம்பந்தம், 4. பர்த்ருபார்யா ஸம்பந்தம், 5. ஜ்ஞாத்ரு ஜ்ஞேய ஸம்பந்தம், 6. ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், 7. ஶரீரஶரீரி ஸம்பந்தம், 8. தார்ய தாரக ஸம்பந்தம், 9. போக்த்ருபோக்ய ஸம்பந்தம்.

## 1. விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தம்

இதில், விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தமாவது – 1. ப்ரக்ருத்யர்த்தஶங்கா நிவர்த்தகமாய், 2.

1. ப்ரக்ருத்யர்த்த ஶங்கா நிவர்த்தகமாகையாவது – ஸமஸ்தஶப்தகாரணமான அகாரஸ்வபாவத்தாலே தத்வாச்யனும், ஸமஸ்தஶப்த வாச்யனான சிதசித்துக்களுக்குக் காரணமாமிடத்தில் "நித்யங்களானவை கார்யமாமிடத்தில் அநித்யங்களாமே" என்கிற ஶங்கையுதிக்க அவை நித்யப்ரஹ்ம விஶேஷணமாகையாலே அநித்யத்வம் ஶங்கநீயமன்றென்று பரிஹரிக்குமதாகை.

2. ஆஶ்ரயாஶ்ரயியாவது – ஶௌக்ல்யம் படத்தைப்பற்றியல்லது நில்லதாப்போலே, சிதசித்துக்கள் பகவத் ஸ்வரூபத்தைப் பற்றியல்லது ஸத்தையற்றிருக்கை.

3. வ்யாவர்த்தக வ்யாவர்த்யமாகையாவது – இவை பகவத்ஸ்வரூபத்துக்குண்டான இதர வ்யாவ்ருத்திக்கு ப்ரகாஶகமாய், வ்யாவர்த்யமான பகவத்ஸ்வரூபம் வ்யாவர்த்தகமான இவற்றையொழிய ப்ரகாஶியாதபடியுமாயிருக்கை. ஆக, நித்யகார்யாநாதித்வஸூசகம் இந்த ஸம்பந்தம்.

## 2. ரக்ஷ்யகரக்ஷக ஸம்பந்தம்

ரக்ஷ்யகரக்ஷக ஸம்பந்தமாகையாவது – 1. தாதுஸித்தமாய், 2. ப்ரக்ருத்யர்த்தாந்தர பாவியாய், 3. உபயஸ்வரூபோசிதமாயிருப்பதொன்று.

1. தாதுஸித்தமாகையாவது – அவ ரக்ஷணே என்கிற தாத்வர்த்தமான ரக்ஷணம்–நிர்விஷயமாயும் நிராஶ்ரயமாயும் நில்லாமையாலே. "யேந ஜாதாநி ஜீவந்தி" இத்யாதி ப்ரஸித்தமான ரக்ஷ்ய ரக்ஷகஸ்வரூப ப்ரதர்ஶநமாகை.

2. ப்ரக்ருத்யர்த்தாநந்தரபாவித்வமாகையாவது – "மூவாத்தனிமுதல்ச் மூவுலகுங் காவலோன்"

என்கிறபடியே, ப்ரக்ருத்யர்த்தமான காரணத்வத்துக்கு அநந்தரம் வேண்டுவதொன்றாகை.

3. உபயஸ்வரூபோசிதமாகையாவது – ரக்ஷ்யரக்ஷக ஸ்வரூபமான பாரதந்த்ர்ய ஸ்வாதந்த்ர்யங்களுக்குச் சேருகை. பரதந்த்ரனுக்கு ஸ்வரக்ஷணாந்வயம் கூடாமையைக் காட்டும் இந்த ஸம்பந்தம்.

## 3. ஶேஷஶேஷி ஸம்பந்தம்

ஶேஷஶேஷிஸம்பந்தமாவது – 1. விபக்திஸித்தமாய், 2. தாத்வர்த்தபரார்த்ததா ப்ரகாஶகமாய், 3. போகாநுரூபதாதர்ஶகமாயிருப்பதொன்று.

1. விபக்திஸித்தமாகையாவது – அகாரத்தில் ஏறிக்கழிந்த சதுர்த்தியிலுதித்த ஶேஷத்வம். "யஸ்யாஸ்மி" இத்யாதி ப்ரஸித்தமான ஶேஷஶேஷிகளைக் காட்டுகை.

2. தாத்வர்த்தபரார்த்ததா ப்ரகாஶகமாகையாவது – தாத்வர்த்தமான ரக்ஷணம் ஶரீரியான ஶேஷிப்ரயோஜந மத்தனையென்று காட்டுகை.

3. போகாநுரூபதா தர்ஶகமாகையாவது – ஶேஷிவஸ்துஸ்வரூபம் ஶேஷிவிநியோகாநு

ஶேஷத்தை அழியமாறி விநியோகிக்குமிடத்தில் பிற்காலியாத முறையுணர்த்தி, ஸ்வகதஸ்வரூபகுணத்தையும் ஸஹியாததொரு ஸம்பந்தம்.

## 4. பர்த்ருபார்யா ஸம்பந்தம்

பர்த்ருபார்யா ஸம்பந்தமாவது – 1. உகாரஸித்தமாய், 2. விபக்த்யர்த்தஶோதகமாய், 3. ஸ்வரூபப்ராப்தமாயிருப்பதொன்று.

1. உகாரஸித்தமாகையாவது – உகாரார்த்தம் அவதாரணார்த்தமாயிருக்கை. அதாவது ரக்ஷகனான புருஷோத்தமனுக்கே ரக்ஷ்யமான ஆத்மஸ்வரூபம் அற்றுத்தீர்ந்திருக்குமென்று தோற்றுகை.

2. விபக்த்யர்த்தஶோதகமாகையாவது – பதிவ்ரதையினுடைய ஶேஷத்வம் அநந்யார்ஹமாயிருக்கும்போலே லுப்தசதுர்த்யர்த்தமான பகவச்சேஷத்வமும் அநந்யார்ஹமென்று மறுக்களைந்திருக்கை.

3. ஸ்வரூபப்ராப்தமாகையாவது – பர்த்ருத்வ பார்யாத்வங்கள் பும்ஸ்த்ரீத்வத்துக்கீடாமாபோலே, பர்த்ருபார்யா ஸம்பந்தம் ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ர்யங்களுக்கீடாகை. அந்யார்ஹப்ரஸங்காஸஹம் இந்த ஸம்பந்தம்.

## 5. ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம்

ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தமாவது – 1. மகாரத்ருஶ்யமாய் 2. உகாரார்த்தாநுஸந்தாநாபேக்ஷிதமாய், 3. அசித்வ்யாவ்ருத்தி வேஷமாயிருப்பதொன்று.

1. மகாரத்ருஶ்யமாகையாவது "மந ஜ்ஞாநே" என்கிற ஜ்ஞாநவாசியான மகாரம் காட்டுகிற ஜ்ஞாத்ருத்வத்துக்கு ஜ்ஞேயம் பகவத்ஸ்வரூபாதிகளாய்த்தோன்றுகை.

2. உகாரார்த்தாநுஸந்தாநாபோக்ஷிதமாகையாவது – உகாரார்த்தமான பர்த்ருபார்யா ஸம்பந்தாநு ஸந்தாநத்துக்கு ஜ்ஞாத்ருத்வம் அபேக்ஷிதமாகை.

3. அசித்வ்யாவ்ருத்தி வேஷமாகையாவது – இந்த ஸம்பந்தங்களையறிகையும், ஜ்ஞேயமும், ஜ்ஞாதாவாகையும். ஜ்ஞேயாதீநமுமாய், தத்ப்ரயோஜநமுமாயிருக்கும் இந்த ஜ்ஞாத்ருத்வமென்று காட்டும் இந்த ஸம்பந்தம்.

## 6. ஸ்வஸ்வாமி ஸம்பந்தம்

ஸ்வஸ்வாமி ஸம்பந்தமாவது – 1. நமஶ்ஶப்ததாத்பர்யமாய், 2. மகாரார்த்த நிபந்தந ப்ரமநாஶகமாய், 3. ஸ்வாபாவிகமாயிருப்பதொன்று.

1. நமஶ்ஶப்த தாத்பர்யமாகையாவது – நமஶ்ஶப்தார்த்தமான அஹம் மமதா நிவ்ருத்தி, பலித்வாபிமாநித்வங்களையும் "ஸ்வகதமன்று பரகதம்" என்று காட்டி, பலியுமாய் அபிமாநியுமான எம்பெருமானுடைமையுமாய்த் தோன்றுகை.

2. மகாரார்த்த நிபநதநப்ரம நாஶகமாகையாவது – மகாரார்த்தமான ஜ்ஞாத்ருத்வ நிபந்தநமாய் வந்த கர்த்ருத்வ ப்ரமத்தை அறுக்குமதாகை. அதாவது–பராதீநமான ஸ்வரூபத்தின் குணவிஶேஷங்களும் பராதீநமென்று ஸ்வாதீ நதாப்ரதிபத்தியைக் கெடுக்கை.

3. ஸ்வாபாவிகமாகையாவது – அஹங்காராதிகளைப் போலே வந்தேறியன்றிக்கே "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்" என்கிற படியே ஜீவபரர்க்களுடைய ஸ்வஸ்வாமிஸப்பந்தம் ஸ்வதஸ்ஸித்தமாய்ப் போருகை. ஸ்வத்துக்கு ஸ்வரக்ஷண கர்த்ருத்வமில்லையென்று, ஸ்வாமிக்கே அது தொழிலென்றும் காட்டுகிறது இந்த ஸம்பந்தம்.

## 7. ஶரீரஶரீரி ஸம்பந்தம்

ஶரீரஶரீரி ஸம்பந்தமாவது – 1. நாராயணபதத்தில் ஸமாஸ விஶேஷ ஸித்தமாய், 2. நமஶ்ஶப்தார்த்த ஸ்வரூபப்ரகாஶகமாய், 3. ஸாமாநாதிகரண்யயோக்யமாய் இருப்பதொன்று.

1. ஸமாஸ விஶேஷஸித்தமாகையாவது – நாராயண பதத்தில் பஹுவ்ரீஹி ஸமாஸத்திலே வ்யாப்யமான நாரங்கள் ஶரீரமாய், அந்தர்வ்யாப்தியாலே வ்யாபக ஸ்வரூபம் ஶரீரியாய்த் தோன்றுகை.

2. நமஶ்ஶப்தார்த்த ஸ்வரூபப்ரகாஶகமாகையாவது – நமஶ்ஶப்தார்த்தமான ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், க்ருஹக்ஷேத்ராதி ஸம்பந்தங்கள் போலன்றிக்கே அப்ருதக் ஸித்தமாயிக்குமென்று காட்டுகை.

3. ஸாமாநாதிகரண்ய யோக்யமாகையாவது – ஸ்வரூபபேதத்தாலே பிந்நப்ரவ்ருத்தி நிமித்தமான ஜீவபரஸ்வரூபம் ஶரீரஶரீரியான ஐக்யத்தாலே ஒன்றென்னலாகை. விஸிஷ்டாத்வைத ப்ரகாஶகம் இந்த ஸம்பந்தம்.

## 8. தார்யதாரக ஸம்பந்தம்

தார்யதாரக ஸம்பந்தமாவது 1. ஸமாஸாந்தர ஸித்தமாய் 2. ஶரீரஶரீரி ஸம்பந்தைகலக்ஷணமா, 3. அசிதவிஶேஷ ஸ்திதி ஹேதுவாயிருப்பதொன்று.

1. ஸமாஸாந்தர ஸித்தமாகையாவது – நாராயண பதத்தில் தத்புருஷ ஸமாஸஸித்தையான பஹிர்வ்யாப்தியாலே நாரபதவாச்யங்கள் தார்யமாய், அயநபதவாச்யன் தாரகனாய்த் தோன்றுகை.

2. ஶரீரஶரீரி ஸம்பந்தைக லக்ஷணமாகையாவது – ஆதேயத்வ விதேயத்வ ஶேஷத்வரூபமான ஶரீரலக்ஷணங்களிலும், ஆதார்த்வ விதாயகத்வ ஶேஷித்வ ரூபமான ஶரீரிலக்ஷணங்களிலும், ப்ரதாநமான ஆதேயத்வ ஆதாரத்வரூபலக்ஷணம் ஒன்றாய்த் தோன்றுகை.

3. அசிதவிஶேஷ ஸ்திதிஹேதுவாகையாவது – "அநேந ஜீவேநாத்மாநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" என்று அந்தர்வ்யாப்திபோலே சேதநஸ்திதி ப்ரதாநமாகை யன்றிக்கே பஹிர் வ்யாப்தியாலே சேதநாசேதநங்களிரண்டினுடையவும் வ்யவஸ்திதஸ்வரூபஸ்திதி வ்யாபாரங்களுக்குக் காரணாமாய்த் தோன்றுகை. சிதசிந்நித்ய ஸ்திதிகாரணம் இந்த ஸம்பந்தம்.

# 9. போக்த்ரு போக்ய ஸம்பந்தம்

போக்த்ரு போக்ய ஸம்பந்தமாவது – சரமவிபக்தி ஸித்தமாய், 2. பூர்வஸம்பந்த ப்ரயோஜந ப்ரதர்ஶகமாய், 3. ப்ரதிஸம்பந்திபோகாநுரூபமாயிருப்பதொன்று.

1. சரமவிபக்தி ஸித்தமாகையாவது – (ஆய) என்கிற சதுர்த்தீ விபக்தியிலே அநந்யார்ஹ ஶேஷபூதனான மகாரவாச்யனுடைய ஸஹஜஶேஷவ்ருத்தி தோன்ற, அதில் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் ஶரீரியான பரமஶேஷிக்கேயாய், ஶரீரமான ஶேஷபூதனுக்கன்றென்றிருக்கை.

2. பூர்வஸம்பந்த ப்ரயோஜந ப்ரதர்ஶகமாகையாவது – ஸர்ப்பவிஷத் தார்யதாரகத்வங்கள் நிஷ்ப்ரயோஜநமாய் விடாதே, ரஸநாரஸவஸ்துவத் தார்யதாரகங்களுக்கு அநுகூல க்ராஹ்யக்ராஹகரூப ப்ரயோஜநத்தைக் காட்டுமதாகை.

3. ப்ரதிஸம்பந்தி போகாநுரூபமாகையாவது – கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஶேஷியினுடைய கைங்கர்யரஸாநுபவத்துக்கும், கைங்கர்யாஶ்ரயமான ஶேஷபூதனுடைய ஶேஷிபோகவிருத்த, ரஸத்வராஹித்யத்துக்கும் இடமாயிருக்கை, ஶேஷித்வத்திலும் ஶேஷத்வத்திலும் மறுக்களைந்தது இந்த ஸம்பந்தம்.

இதில், 1. விஶேஷண விஶேஷ்ய ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே காரணாந்தரஶங்கை அறும். 2. ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ரக்ஷகாந்தரஶங்கை அறும். 3. ஶேஷஶேஷி ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ஶேஷ்யந்தரஶங்கை அறும். 4. பர்த்ருபார்யாஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே அந்யார்ஹஶங்கை அறும். 5. ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ஜ்ஞேயாந்தரஶங்கை அறும். 6. ஸ்வஸ்வாமி ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ஸ்வாதந்த்ர்யஶங்கை அறும். 7. ஶரீரஶரீரி ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே ஸ்வரூபைக்யஶங்கை அறும். 8. தார்யதாரக ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே தாரகாந்தரஶங்கை அறும். 9. போக்த்ரு போக்ய ஸம்பந்தஜ்ஞானம் பிறக்கவே போக்த்ருத்வஶங்கை அறும். – ஆக நவவிதஸம்பந்தமுமறிந்து ஆநந்தித்திருக்கவும்.

நவவித ஸம்பந்தம் முற்றிற்று.
ஶ்ரீ பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே ஶரணம்.
ஜீயர் திருவடிகளே ஶரணம்.